# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:** 11/மா/2025
நாள்: 14.07.2025

திரு. முகம்மது யூசுப்
சென்னை — முறையீட்டு மனுதாரர்

(1) மண்டல அலுவலர்,
மண்டலம்–8
பெருநகர சென்னை மாநகராட்சி — எதிர்மனுதாரர்கள்
(2) திருமதி அம்மா பொண்ணு
சென்னை–600 010

சென்னை, சித்தாலப்பாக்கம், வினோபா நகர், எண் 5/53E என்கிற முகவரியில் வசிக்கும் திரு. முகம்மது யூசுப் என்பவரின் 07.11.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 09.11.2024 அன்று பெறப்பட்டு 11/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

சென்னை, சித்தாலப்பாக்கம், வினோபா நகர், எண் 5/53E என்கிற முகவரியில் வசிக்கும் திரு. முகம்மது யூசுப் என்பவர் தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

“சென்னை 10, கீழ்ப்பாக்கம், தியாகப்ப முதலி தெருவில் கதவு இலக்க 65–ல் உள்ள வீட்டில் எனது நண்பர் அவரது குடும்பத்தினருடன் தங்கியிருந்தார். அவரை சந்திப்பதற்கு அங்கு அடிக்கடி செல்வேன். அந்த வீடு மிகவும் குறுகிய சந்துக்குள் இருக்கிறது. குறிப்பாக சொல்லப்போனால் அந்த வீடு 6 அடி அகல சந்தில் உள்ளது. அந்த சந்தில் 3 வீடுகள் உள்ளன. எனது நண்பர் தங்கியிருந்த வீடு இரண்டாவது வீடு. 3வது வீட்டில் நான்கு வீடுகள் உள்ளது. 3–ல் வாடகைதாரர்கள் உள்ளனர். 1–ல் உரிமையாளரின் மகன் தங்கியுள்ளார். அந்த சந்தில் என்னுடைய பைக்கை நிறுத்தும் பொழுது அடிக்கடி அந்த கட்டிடத்தில் வாடகைக்கு இருப்பவர்கள் தகராறு செய்து வருவார்கள். நான் இது குறித்து எப்படி இந்த சந்தில் நான்கு வீடுகள் கட்ட அனுமதி கொடுத்தனர். எவ்வாறு இந்த கட்டிடம் கட்டப்பட்டது குறித்து எனது நண்பர் மூலம் கட்டிட அனுமதி வரைப்படத்தை த.அ.உ. சட்டத்தின் கீழ் பெற்று பார்த்தேன்.

கதவு இலக்கம் 66–ல் உள்ள கட்டிடம் அம்மாபொண்ணு என்பவருக்கு கடந்த 01.03.2012–ல் சென்னை மாநகராட்சி திட்ட அனுமதி (திட்ட அனுமதி எண் டி8/0473/2012 கட்டிட அனுமதி எண் டி8/1031/2012) வழங்கியுள்ளது. அனுமதிக்கப்பட்ட கட்டிட வரைப்படம் தங்கள் பார்வைக்காக இணைக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி வழங்கிய திட்ட மற்றும் கட்டிட அனுமதியின்படி நான்கு பக்கமும் 5 அடி அகல **set back** விட வேண்டும். அதாவது 1.5 மீட்டர் அகலம். ஆனால் அவர் கிழக்கு பக்கம் 5 அடி அகலம் விடாமல் 1 அடி அகலம் விட்டு **Pillar** போட்டு வீடு கட்டியுள்ளார். மற்ற மூன்று பக்கங்களும் 1.5 மீட்டர் இடைவெளி விடவில்லை. மேலும் முதல் மாடியில் லிண்டல் விட்டு மனை நான்கு பக்க அளவிற்கு வீட்டை முதல் தளத்தில் கட்டியுள்ளார். பக்கத்து வீட்டில் வசிப்பவர்களுக்கு காற்று வெளிச்சம் ஆகியவை தேவை என்பதால் தான் **side set back** விட வேண்டும் என்று கட்டிட விதிகள் இயம்புகிறது. மேலும் நெருக்கடி காலங்களில் மீட்புத்துறை வண்டிகள் உள்ளே செல்வதற்கு ஏதுவாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த இடைவெளி. ஆனால் எவ்வாறு அந்த சந்தில் ஒரு திட்ட அனுமதி வழங்கப்பட்டது என்று தெரியவில்லை.

மேற்படி டி.அம்மாபொண்ணு அவர்கள் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் பிரிவு 49ன் படி திட்ட அனுமதி பெற்று அதன்படி கட்டாமல் கட்டிட அனுமதிக்கு புறம்பாகவும் சட்ட விரோதமாகவும் வீட்டை கட்டியுள்ளார்.

மேற்படி சட்டத்தின் பிரிவு 56ன்படி கட்டிடம் திட்ட மற்றும் கட்டிட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டிருந்தால் பிரிவு 56(1)(பி) பொருந்தும். அப்படி திட்ட மற்றும் கட்டிட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டிருந்தால் பிரிவு 56(1)(டி) (ii)படி மேற்படி கட்டிட உரிமையாளரை அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு ஏற்றவாறு கட்டிடத்தை மாற்றி அமைக்க உத்தரவிட்டு ஒரு அறிவிப்பு அனுப்ப இயம்புகிறது. அப்படி அறிவிப்பில் கண்ட குறிப்பிட்ட நாட்களில் கட்டிடத்தை மாற்றி அமைக்காவிடில் கட்டிடத்தை இழுத்து பூட்ட அனுமதிக்கிறது.

மேற்படி கட்டிடம் **side set back; structural violation** செய்து கட்டப்பட்டுள்ளது என்பதனை நிரூபிக்க புகைப்படங்கள் இணைக்கப்பட்டுள்ளது.

ஆகவே, மேற்படி டி. அம்மாபொண்ணு என்பவர் கட்டிட அனுமதியை மீறி சென்னை–10 தியாகப்ப (முதலி) தெரு கதவிலக்கம் 66ல் கட்டியுள்ள வீட்டின் மீது நடவடிக்கை எடுத்து 01.03.2012ல் வழங்கப்பட்ட திட்ட மற்றும் கட்டிட அனுமதிக்கு ஏற்றவாறு கட்டிடத்தை குறிப்பிட்ட நாட்களுக்குள் மாற்றியமைக்கவும் அல்லாவிடில் கட்டிடத்தை இழுத்து பூட்டவும் மேலும் இடித்து மனையை பழைய நிலைமைக்கு மாற்றிக் கொண்டு வரவும், தங்களுக்கு கீழ் பணிபுரியும் 8வது மண்டல அலுவலர் மற்றும் 8வது மண்டல செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் வார்டு 100 (103) பொறுப்பில் இருக்கும் உதவி பொறியாளர் ஆகியோருக்கு ஆணையிடுமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சியின் நகரமைப்பு பிரிவு திட்ட மற்றும் கட்டிட அனுமதி வழங்கிவிட்டால் மற்றும் போதாது. கட்டிட அனுமதி பெற்ற உரிமையாளர்கள் வழங்கப்பட்ட கட்டிட அனுமதி படித்தான் வீடு அல்லது கட்டிடம் கட்டுகிறார்களா என்பதை உறுதிபடுத்த வேண்டும். ஆனால் அனுமதி பெறப்பட்டு கட்டப்படும் கட்டிடங்களை உதவி பொறியாளரோ அல்லது அவரின் மேல் அலுவலரோ சென்று புல தணிக்கை செய்வதில்லை. அதனால் தான் இவ்வளவு ஒழுங்கு மீறல். இது குறித்து ஆணையர் என்ற முறையில் நகரமைப்பு அலுவலர்களுக்கு எதாவது வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளதா? அல்லது

சென்னை மாநகராட்சி சட்டத்தின்கீழ் ஏதாவது விதிகள் உருவாக்கப்பட்டுள்ளதா? திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்கிவிட்டால் போதும் என்ற மனப்பான்மையை பெருகி உள்ளது. சென்னை பெருநகரில் ஏதாவது ஒரு கட்டிடம் சாலையை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளது. ஆகவே அய்யா அவர்கள் சுகாதார துறை செயலராக இருந்து நெருக்கடி காலத்தில் மக்களை காப்பாற்றியது போல் சென்னை மாநகர மக்களை சட்டத்திற்கு புறம்பான கட்டுமானங்களிலிருந்து காப்பாற்ற வேண்டுகிறேன்.

சென்னை பெருநகரின் ஆணையராகிய தங்களுக்கு பணிகள் அதிகம். ஆனாலும், சற்றும் சிரமம் பராமல் இந்த புகாரின் மீது தங்களுடைய கவனத்தில் கொண்டு மேல் நடவடிக்கைக்கு ஆணையிடுமாறு மிகவும் பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

மேற்படி புகார் சென்னை மாநகராட்சி ஆணையருக்கும் சென்னை மாநகராட்சி எட்டாவது மண்டல செயற்பொறியாளருக்கும் ஆகியோருக்கும் விரைவு அஞ்சலில் அனுப்பப்பட்டு அது மாநகராட்சி ஆணையருக்கு கடந்த 11.07.2024 அன்று கிடைக்கப்பெற்று அதற்கு ஒப்புதல் அட்டையும் பெறப்பட்டுள்ளது. எட்டாவது மண்டல செயற்பொறியாளர் அவர்கள் கடந்த 11.07.2024 அன்று மேற்படி புகாரை பெற்றுள்ளார். அதற்கு ஒப்புதல் அட்டையும் பெறப்பட்டுள்ளது. மேற்படி புகார் தங்களுடைய அலுவலகங்களில் பெறப்பட்டும் இதுகாறும் எனக்கு எந்தவிதமான பதிலும் கிடைக்கப்பெறவில்லை. ஆகவே, மேற்படி மாநகராட்சி ஆணையர் மற்றும் எட்டாவது மண்டல செயற்பொறியாளர் ஆகியோர் தங்கள் பணியை சரிவர செய்யவில்லை என்றே நிரூபணம் ஆகிறது.

மேற்படி புகாரை நினைவுபடுத்த கடந்த 05.08.2024 நாளில் சென்னை மாநகராட்சி ஆணையருக்கும் எட்டாவது மண்டல செயற்பொறியாளர் அவர்களுக்கும் முறையாக நினைவூட்டு கடிதம் விரைவு அஞ்சல் ஒப்புகை அட்டையுடன் அனுப்பப்பட்டது. மேலும் செயற்பொறியாளருக்கு அனுப்பப்பட்ட நினைவூட்டு கடிதம் எட்டவாது மண்டல அலுவலருக்கும், உதவி செயற்பொறியாளர் அவர்களுக்கும் உதவி பொறியாளர் அவர்களுக்கும் நகல் மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டது. அந்த நினைவூட்டு கடிதம் கடந்த 11.08.2024 அன்று மண்டல அலுவலர் மற்றும் செயற்பொறியாளர் ஆகியோருக்கு சார்வு செய்யப்பட்டு ஒப்புகை கடிதம் கிடைக்கப்பெற்றது. உதவி செயற்பொறியாளர் என்ற பதவி எட்டாவது மண்டலத்தில் இல்லை என்று அவருக்கு அனுப்பிய நினைவூட்டு கடிதம்–1 திரும்ப வரப்பெற்றுள்ளது. உதவி செயற்பொறியாளர் பதவி ஒவ்வொரு யூனிட்டுக்கும் ஒருவர் என்று சென்னை மாநகராட்சியில் நியமனம் செய்துள்ளனர். ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை அந்த கடிதம் திருப்பப்பட்டுள்ளது. அதன் நகல்கள் தங்கள் மேல்நடவடிக்கைக்காக இணைக்கப்பட்டுள்ளது. ஆணையருக்கு அனுப்பப்பட்ட நினைவூட்டு கடிதம்–1 07.08.2024 அன்றே சார்பு செய்யப்பட்டு ஒப்புகை அட்டை பெறப்பட்டுள்ளது. ஆனால் இதுகாறும் எந்தவிதமான நடவடிக்கையும் என்னுடைய புகாரின் மீது எடுக்கப்படவில்லை. இதனால் சென்னை மாநகராட்சி ஆணையர் எட்டாவது மண்டல அலுவலர், செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் ஆகியோர் தங்களுடைய பதவிக்கு உரித்தான பணியை சரிவர செய்யவில்லை என்று நிரூபணம் ஆகிறது.

மேலும் மேற்கண்ட புகாரின் மீதும் நினைவூட்டு கடிதம் 1–ன் மீது நடவடிக்கை எடுக்க கோரி நினைவூட்டு கடிதம்–2 கடந்த 04.09.2024 அன்று மேற்படி சென்னை மாநகராட்சி ஆணையர், எட்டாவது மண்டல செயற்பொறியாளர், மண்டல அலுவலர், உதவி பொறியாளர் ஆகியோருக்கு அனுப்பப்பட்டது. அந்த நினைவூட்டு கடிதம்–2 செயற்பொறியாளருக்கு கிடைக்கப் பெற்று அதற்காக ஒப்புகை அட்டை எனக்கு

வந்துள்ளது. உதவி பொறியாளருக்கு அனுப்பப்பட்ட கடிதம் அந்த பதவி அங்கு இல்லை என்று திரும்ப பெறப்பட்டுள்ளது.

முறையாக புகார், நினைவூட்டு கடிதம்–1 மற்றும் நினைவூட்டு கடிதம்–2 ஆகிய கடிதங்கள் அனுப்பப்பட்டும் ஒரு இந்திய குடிமகனுக்கு மேற்படி சென்னை மாநகராட்சி அலுவலர்களால் எந்த பதிலும் அனுப்ப முடியவில்லை. பதில் அனுப்ப முடியவில்லை என்றால் ஏன் உள்ளாட்சி துறையில் அந்த பதவியில் பொதுமக்கள் வரிபணத்தில் சம்பளம் வாங்கி கொண்டு காலம் தள்ள வேண்டும் என்று ஒரு குடிமகன் கேள்விக்கு பதில் ஒன்றும் இல்லை.

நிறைவாக தங்களை அணுகினால் நல்லது நடக்கும் என்று ஒரு நண்பர் என்னிடம் வலியுறுத்தி கூறி தங்களுடைய முகவரியும் எனக்கு அளித்தார். அதன் பேரில் இந்த புகாரை தங்களுக்கு அளிக்கிறேன். புகாரில் முகாந்திரம் உள்ளது. புகாரை ரூசு படுத்த நான் அனுப்பிய புகாரின் நகல், நினைவூட்டு கடிதம்–1–ன் நகல் மற்றும் நினைவூட்டு கடிதம்–2 நகல் மற்றும் அஞ்சல் ரசீதுகள் ஒப்புகை அட்டைகள் திரும்ப பெறப்பட்ட கடித உறைகள் ஆகியவை இந்த புகாரோடு இணைத்து அனுப்பியுள்ளேன்.

மேற்படி சூழ்நிலையில் தங்களுடைய பதவிக்கு அளிக்கப்பட்ட பணியினை செய்யாமல் அதுவும் ஒரு குடிமகன் அனுப்பிய புகார் கிடைக்கப்பெற்றும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து வரும் ஆணையர், சென்னை மாநகராட்சி, செயற்பொறியாளர், எட்டாவது மண்டலம், சென்னை மாநகராட்சி, மண்டல அலுவலர் எட்டாவது மண்டலம், சென்னை மாநகராட்சி, உதவி செயற்பொறியாளர் எட்டாவது மண்டலம் யூனிட் (23) உதவி பொறியாளர் டிவிசன் (100) ஆகியோர் மீது தங்களுடைய அதிகாரத்தை பயன்படுத்தி நடவடிக்கை எடுக்க கோருகிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 13.01.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 8, மண்டல அலுவரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 8, மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர் தனது 17.02.2025 நாளிட்ட கடிதம் Z.O.VIII.C.No.733/2025–ல் தெரிவிக்கப்பட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"It is submitted that one Mr. Mohammed Yousuf, has filed a complaint in Complaint No.11/C/2025 before the Tamil Nadu Local Bodies Ombudsman stating that the owner of the building at No.66, Thiyagappa Street, Kilpuak, Chennai-600 010, had put an unauthorized construcution and requested to direct the officials of Greater Chennai Corporation to take enforcement action against the above said building.

It is submitted that, earlier the Mrs.Amma Ponnu, the owner of the building in question had given a complaint against one Mr.Balakrishnan, her neighbouring building at No.65. Thiyagappa Street, Kilpauk. Chennai-600 010, before the Tamil Nadu Local Bodies Ombudsman and based on the said complaint action has been taken against the said building by issuing notices under the provisions of Tamil Nadu Town and Country Planning Act, 1971 and the above said building was locked and sealed by the officials of Greater Chennai Corporation on 08.01.2024.

It is submitted that aggrieved by the same said Mr.Balakrishnan, has filed a Writ Petition before the Hon'ble High Court in W.P.No.1028 of 2024, challenging the orders passed by the Tamil Nadu Local Bodies Ombudsman. After hearing all the parties concerned the Hon'ble High Court by order dated 12.08.2024 has allowed the Writ petition by setting aside the orders passed by Tamil Nadu Local Bodies Ombudsman and has directed the officials of Greater Chennai Corporation to take further action pursuant as per the direction of the Government in the statutory revision filed under Section 80-A of Town and Country Planning Act, 1971 by Mr.Balakrishnan.

It is submitted that while the matter stood thus, the complainant has given the above complaint who is neither a resident in that locality nor the complainant has been affected due to the building at No.66, Thiyagappa Street, Kilpauk, Chennai-600 010. Based on the complaint received from the complainant herein action has been taken by issuing a Notice for Production of Documents under Section 56 and 57 of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 dated 02.08.2024 to Mrs.Amma Ponnu, viz., the owner of the building in question.

It is submitted that on receipt of the above notice the owner of the building in question has given a letter stating that she is senior citizen and she does not understand English and requested to issue notice in Tamil language. It is submitted that while so, said Mrs.Amma Ponnu has given several petitions and also given a complaint dated 07.12.2024 against the officials of Greater Chennai Corporation before the Secretary, Housing and Urban Development Department. alleging that the officials of Greater Chennai Corporation without taking action against her neighboring building, harassing her by issuing notice and requested to protect her under the Senior Citizen Act, 2007 and 2019.

It is submitted that further enforcement action against the building in question at No.66, Thiyagappa Street, Kilpauk, Chennai-600 010, was taken by issuing Notice for Inspection dated 14.02.2025. Further, action against the building in question will be taken as per the provisions of Tamil Nadu Town and Country Planning Act, 1971.

Hence, this Hon'ble Tribunal may be pleased to accept the report."

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களான பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 8, மண்டல அலுவலர் மற்றும் திருமதி அம்மா பொண்ணு ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 24.03.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 18.03.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. ஆனால், மனுதாரர் 24.03.2025 அன்று நடைபெற்ற விசாரணைக்கு நேரடியாக ஆஜராகவில்லை. மனுதாரருக்கு பதிவு தபாலில் அனுப்பப்பட்ட அழைப்பாணை "Absent" என்ற அஞ்சலக குறியீட்டுடன் திரும்ப பெறப்பட்டது.

6. எதிர்மனுதாரர்களில் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 8–ன் செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் 24.03.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:

“ஏற்கனவே சென்னை கீழ்ப்பாக்கம் தியாகப்பா தெரு, கதவு எண்.66–ல் வசிக்கும் திருமதி.அம்மாபொண்ணு என்பவர், திரு.பாலகிருஷ்ணன் என்பவர் மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் மனு சமர்ப்பித்தன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இது தொடர்பாக திரு.பாலகிருஷ்ணன் என்பவர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.W.P.No.1028 of 2024 தொடரப்பட்டு இவ்வழக்கில் 12.08.2024 நாளிட்ட தீர்ப்பில், இம்முறைமன்ற ஆணையினை தள்ளுபடி செய்தும், பெருநகர சென்னை மாநகராட்சி தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு திட்டம் சட்டம் 1971–ன் பிரிவு 80–ன்படியின் கீழ் தமிழ்நாடு அரசு ஆணையிட்டவாறு உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஆணையிட்டது.

தற்போதைய முறையீட்டு மனுதாரர் புகார் தெரிவித்துள்ள பகுதியை சேர்ந்தவரும் இல்லை மற்றும் புகார்தாரரால் பாதிக்கப்பட்டவரும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் Tamil Nadu Town and Country Planning Act, 1971 பிரிவு 56 (மற்றும்) 57ன் கீழ் மனுதாரர் தெரிவித்துள்ள திருமதி.அம்மாபொண்ணு அவர்களுக்கு Notice for production of documents கோரி தாக்கீது வழங்கப்பட்டுள்ளது. மற்றும் அமலாக்க நடவடிக்கைக்காக 14.02.2025 நாளிட்ட தாக்கீது வழங்கப்பட்டுள்ளது.

மேலும் எதிர் மனுதாரரான திருமதி.அம்மாபொண்ணு அவர்கள் தாக்கீது தமிழ் மொழியில் கோரியதற்கு இணங்க சென்னை தலைமையிடத்து Town Planning Section–க்கு 06.03.2025 நாளிட்ட கடிதத்தில் உரிய ஆணை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. ஆணை பெறப்பட்ட பின்பு தமிழில் தாக்கீது அளிக்கப்பட்டு திருமதி.அம்மாபொண்ணு அவர்களால் அளிக்கப்படும் வரைப்படத்தின்படி உரிய சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்று இம்முறைமன்றம் முன் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.”.

7. மேலும், மற்றொரு எதிர்மனுதாரர்களான திருமதி அம்மா பொண்ணு மற்றும் திரு. க. தங்கராஜ் ஆகியோர் 24.03.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:

“மேற்படி முகவரியில் உள்ள எங்களது வீடு Continues Planning Area என்ற வகைப்பாட்டை சேர்ந்தது. இவ்வகையான வகைப்பாட்டை சேர்ந்த கட்டிடங்களுக்கு மூன்று பக்கம் இடைவெளி விடவேண்டிய அவசியம் இல்லை. கட்டிடத்தின் முன் பகுதியில் மட்டும் இடைவெளி விட்டால் போதுமானது. ஆனால் நாங்கள் மூன்று பக்கமும் போதுமான இடைவெளி விட்டு கட்டி உள்ளோம்.

வீட்டிற்கான வரைப்பட அனுமதியின்படி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. எந்தவித விதி மீறலும் இல்லை. மொத்தம் 2500 சதுர அடியில் 1500 சதுர அடி மட்டுமே வீடு கட்டப்பட்டுள்ளது.

நாங்கள் ஏற்கனவே புகார் அளித்த பக்கத்து வீட்டு உரிமையாளர் வீட்டின் மீது சென்னை உயர்நீதிமன்ற ஆணையின்படியோ, அரசு வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அளித்த ஆணையின்படியோ, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல 8ன் மண்டல அலுவலர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என புகார் தெரிவித்தேன். அதன்பேரில் திரு.பாலகிருஷ்ணன் வீட்டிற்கு 8.1.2024 அன்று சீல் வைப்பதாக கூறினார்கள். ஆனால் அவர் இன்னமும் அந்த வீட்டில் வசித்து வருகிறார்.

எங்கள் மீது புகார் அளித்திருக்கும் திரு.முகமது யூசுப் என்பவர் எங்கள் பகுதியில் இருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளார். அவருக்கும் எங்களுடைய வீட்டிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை.

எனவே மேற்கண்ட எங்கள் வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு மனுதாரர் திரு.முகமது யூசுப் அவர்கள் அளித்த புகார் மனுவினை தள்ளுபடி செய்யுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணியுடன் கேட்டுக் கொள்கிறோம்.''.

8. இந்நிலையில், மனுதாரருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்கும் வகையில் மனுதாரரையும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 8, மண்டல அலுவலர் மற்றும் எதிர்மனுதாரரான திருமதி அம்மா பொண்ணு ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 09.04.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 26.03.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

9. ஆனால், மனுதாரர் 09.04.2025 அன்று நடைபெற்ற விசாரணைக்கும் நேரடியாக ஆஜராகவில்லை.

10. எதிர்மனுதாரர்களான பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 8–ல் செயற்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோர் 09.04.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:

''தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவ 18.03.2025 நாளிட்ட கடிதத்தில் சென்னை சித்தலாபாக்கம் வினோபா நகர் 5/53 E, என்கிற முகவரியில் வசிக்கும் திரு.முகம்மது யூசுப் அவர்கள் அளித்த முறையீட்டு மனு மீதான 24.03.2025 அன்று நடைப்பெற்ற விசாரணையில் ஆஜராக கோரி ஆணையிடப்பட்டது. அதன் பிரகாரம் நாங்கள் 24.03.2025 .அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நேரடியாக ஆஜராகி எங்களது வாக்குமூலத்தை பதிவு செய்தோம். அதன் தொடர்ச்சியாக எதிர் மனுதாரர் ஆன திருமதி.அம்மாபொண்ணு அவர்கள் தாக்கீது தமிழ் மொழியில் கோரியதற்கு இணங்க சென்னை தலைமையிடத்தில் Town Planning Sectionக்கு 6.03.2025 நாளிட்ட கடிதத்தில் உரிய கருத்துரு வழங்குமாறு கோரப்பட்டது.

இருப்பினும், Tamil Nadu Town and Country Planning Act 1971ன்படி மனுதாரர் கோரிக்கை மீது தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இம்முறை மன்றத்தின் முன் தெரிவித்துக்கொள்கிறோம்.

11. மற்றொரு எதிர்மனுதாரரான திருமதி அம்மாபொண்ணு 09.04.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி தங்களது மனுவினை சமர்ப்பித்தார்: அம்மனுவில்:-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவ முறையீட்டு மனு எண்.11/மா/2025 நாள் 18.03.2025 மற்றும் 26.03.2025 விசாரணைக்கு 2வது எதிர் மனுதாராகிய நான் பணிவுடன் சமர்பிக்கும் பதில் மனு.

(1) தங்கள் அலுவலக மேற்கண்ட அழைப்பின் பேரில் 24.03.2025 11 மணிக்கு தங்கள் நடுவத்தில் நேரடியாக ஆஜராகி நடந்தவற்றை எடுத்து கூறினேன்.

(2) தங்கள் அலுவலக அதிகாரிகளால் நான் கூறியவற்றை தட்டச்சு செய்து கொடுத்த பேப்பரில் கையெழுத்திட்டு கொடுத்தேன். அதன் பின் தங்கள்

அலுவலர்கள் நீங்கள் வீட்டுக்கு செல்லலாம் என்று கூறியதன் பேரில் நான் வீட்டுக்க சென்று விட்டேன்.

(3) மறுபடியும் 09.04.2025 நண்பகல் 12 மணிக்கு விசாரணைக்கு வரும்படி அழைப்பாணையை 29.03.2025 பெற்றுக் கொண்டேன். தங்கள் நடுவத்தில் 09.04.2025 விசாரணைக்கு என் எழுத்துபூர்வமான பதிலை சமர்ப்பிக்கின்றேன். சென்னை மாநகராட்சி மண்டலம் 8ன் அலுவலர்கள் திட்ட அனுமதி எண்.PPA/WDC8/00473/2012, கட்டிட அனுமதி எண்.BA/CD08/0103/2012 வழங்கினார்கள். ஆனால், அவர் அதன்படி வீடு கட்டவில்லை. ஆகவே தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று 19.10.2024 கடிதத்தில் திரு.முகமது யூசுப் த.உ.அ. முறை மன்றத்தில் முறையீட்டுள்ளார்.

(4) திரு முகமது யூசுப் த.உ.மு. நடுவர் அவர்களுக்கு 19.10.2024 கடிதத்தில் 2ம் பக்கத்தில் 3வது பாராவில் குறிப்பிட்டுள்ளதாவது:-

<u>கேள்வி (1)</u> சென்னை மாநகராட்சி வழங்கிய திட்ட மற்றும் கட்டிட அனுமதியின்படி நான்கு பக்கமும் 5 அடி அகலம் Set Back விட வேண்டும். அதாவது 1.5 மீட்டர் அகலம் ஆனால், அவர் கிழக்கு பக்கம் 5 அடி அகலம் விடாமல் 1 அடி அகலம் விட்டு Pillar போட்டு வீடு கட்டியுள்ளார்.

பதில் : சென்னை எழும்பூர் கிராமம் பிளாக் எண்.10, கீழ்பாக்கம் தியாகப்பா தெரு, RS No.128/3 கதவு எண்.42/66 இருக்கும் CMDA ரூல்ஸ்படி கன்டினியூஸ் பில்டிங் ஏரியாவாகும். இந்த ஏரியாவில் வீடு கட்ட வீட்டின் முன் பக்கம் 1.5 மீட்டர் அகலம் காலியிடம் விட்டால் போதும், மற்ற மூன்று பக்கமும் காலியிடம் விட தேவையில்லை என்று சட்டம் கூறுகிறது. சென்னை பெருநகர மாநகராட்சி 8வது அண்ணா நகர் மண்டல செயற்பொறியாளர் மற்றும் பொது தகவல் அலுவலர் கடித ம.அ.8.ந.க.எண்.அ.4/9314/2019 நாள் 15.02.2022.

<u>கேள்வி (2)</u> திருமதி.த.அம்மா பொண்ணு 13.01.2012ல் சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம் 8ன் கட்டிடம் கட்ட திட்ட அனுமதியும், கட்டிட அனுமதியும் பெறுவதற்காக எல்லா பக்கமும் 5 அடி அகலம் காலியிடம் விடுவதாக பிளான் வரைபடம் சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம் 8ல் சமர்ப்பித்துள்ளார்கள். அதன்படி சென்னை மாநகராட்சி மண்டலம் 8ன் அலுவலர்களால் திட்ட அனுமதி எண். PPA/WDC8/00473/2012, கட்டிட அனுமதி எண். BA/CD08/0103/2012 வழங்கினார்கள். ஆனால் அவர் அதன்படி வீடு கட்டவில்லை. ஆகவே தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று 19.10.2024 கடிதத்தில் திரு.முகமது யூசுப் த.உ.அ முறை மன்றத்தில் முறையீட்டுள்ளார்.

<u>பதில் :</u> நான் சென்னை எழும்பூர் கிராமம் கதவு எண்.42/66 பிளாக் எண்.10, RS 128/3ல் கன்டினியூஸ் பில்டிங் ஏரியாவில் வீடுகட்ட பிளான் அனுமதி பெறாததற்காக கட்டிட வரைபடத்தை சென்னை பெருநகர மாநகராட்சி, அண்ணா நகர், மண்டலம் 8ன் மனு நாள் 13.01.2012ல் கொடுத்தேன். அதற்கான தொகை ரூ.66,550/– நாள் 10.02.2012ல் கட்டி சமர்ப்பித்தேன். அதில் கூர்ந்தாய்வுக் கட்டணம் (Scrutiny Fees) Rs.600/- அடக்கமாகும்.

நான் சமர்ப்பித்த கட்டிட வரைபடத்தை 46 நாட்கள் கூர்ந்தாய்வு செய்துள்ளார்.

கூர்ந்தாய்வு செய்த அதிகாரிகள் தங்கள் கட்டிட வரைபடத்தில் 4 பக்கமும் 5 அடி அகலம் காலியிடம் விட்டு வரைபடம் சமர்ப்பித்துள்ளீர்கள்.

ஆனால் தங்கள் வீடு கட்டும் இடம் கன்டியூனிஸ் பில்டிங் ஏரியாவாகும். இந்த இடத்தில் வீடு கட்ட முன் பக்கம் மட்டும் 1.5 மீட்டர் (5 அடி) விட்டால் போதும் மற்ற மூன்று பக்கமும் காலியிடம் விட வேண்டாம். இது தான் சென்னை பெரு நகர மாநகராட்சி சட்டமாகும்.

ஆகவே அதற்கேற்ப வரைபடத்தை மாற்ற நினைத்தால் தாங்கள் மாற்றி சமர்ப்பிக்கலாம் என்ற விபரத்தை 46 நாட்கள் கட்டிட வரைபடத்தை கூர்ந்தாய்வு செய்த அதிகாரிகள் திருமதி.த.அம்மாபொண்ணுவிடம் தகவல் தெரிவிக்கவில்லை. சரியான தகவல் வழங்க வேண்டியது சென்னை மாநகராட்சி அதிகாரிகள் கடமையாகும். இது சேவை குறைபாடாகும்.

சென்னை மாநகராட்சி அதிகாரிகள் பொதுமக்கள் வரி பணத்தில் மாத சம்பளம் பெறுகிறார்கள். நான் அரசுக்கு வரி பணம் செலுத்தி வருகின்றேன். வரி பணம் செலுத்தும் பொதுமக்களுக்கு சேவையும் வசதியும் செய்து தர வேண்டியது பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகளின் கடமையும் பொறுப்பும் ஆகும். தகவல் அறியும் உரிமைச்சட்டம் நமது இந்திய நாட்டில் 12.10.2005ல் நடைமுறைக்கு வந்தது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் இயல் 2 பிரிவு 4 சட்டம் 12.2.2006 முதல் நடைமுறைக்கு வந்தது.

<u>தகவல் அறியும் உரிமைச் சட்டம் இயல் 2 பிரிவு 4 பொது அதிகார அமைப்புகளின் கடப்பாடுகள்</u>
<u>CHAPTER II RIGHT TO INFORMTION OF PUBLIC AUTHORITIES</u>

1.பொது அதிகார அமைப்புகள் தானாக முன் வந்து அரசு அலுவலகங்கள் தன் துறை சார்ந்த விபரங்களை வெளிப்படையாக எல்லா தகவல் சாதனங்கள் வழியாக தெரியப்படுத்த வேண்டும். (உ.ம்) இதற்கான ஆதாரமான த.அ.உ.சட்டம் 2005 பிரிவு 4 நகல் 3 பேப்பர் (தமிழ்). இணைக்கப்பட்டுள்ளது.

2. மத்திய தகவல் ஆணையத்தின் முக்கிய தீர்ப்புகள் வரிசை எண் 12ல் குறிப்பிட்டுள்ளபடி தகவல் வேண்டியவருடன் நேரில் கலந்துரையாட வேண்டும் (Personal Discussion with the requester) கேட்கப்பட்ட தகவல் அல்லது கொடுக்கப்பட்ட தகவல் பொதுவாகக் குழுப்பமானதாக இருக்கும்பொழுது விண்ணப்பதாரர்களும், எதிர் மனுதாரர்களும் நன்றாக அமர்ந்து பேசினால் சரியாகி விடும் (CIC/WB/2006/00180/5-7-2006) இணைக்கப்பட்டுள்ளது.

அரசு அலுவலங்களில் தகவல் தொகுத்து வைக்கப்படாமைக்கு மத்திய அரசாங்கம் கண்டனம்.

3. தகவல் பெறும் உரிமை சட்டம் 2005 சேப்டர் 2 பிரிவு 4ன்படி அரசு அலுவலங்களில் பொது மக்களுக்கு தேவையான தகவல்களை 2009 வரை சரியாக உரிய நடவடிக்கை எடுக்காததாலும் தானாக முன் வந்து சரிவர மக்களிடத்தில் கொண்டு செல்லாததை கண்டனம் செய்து No.12/192/2009-IR Government of India Ministry of Personnel Public Grievances and Pensioner's (Department of Personal and Training) North Block. New Delhi dated the 20.01.2010 office memorandum letter இணைக்கப்பட்டுள்ளது.

4. தகவல் அறியும் உரிமை சட்டம் 2005 இயல் 2 பிரிவு 4 பற்றிய தகவல்களை பொதுமக்களுக்கு தெரியப்படுத்த தக்க உத்தரவு வழங்கிய இந்திய உச்ச நீதி மன்ற உத்தரவு W.P.No.(civil) 990 of 2021.

சென்னை எழும்பூர் கிராமம் பிளாக் எண் 10, சென்னை கீழ்பாக்கம் தியாகப்பா தெரு, கதவு எண் 42/66 Rs. No.128/3 பட்டா நிலத்தில் நீளம் 60 சதுரடி அகலம் 42 சதுரஅடி மொத்தம் 2520 சதுரடி. இதில் கீழ்தளத்தில் நீளம் 50 சதுரடி அகலம் 30 சதுர அடி மொத்தம் 1500 சதுர கட்டிடம் கட்டியுள்ளேன். நிலத்தில் 60% தான் கட்டியுள்ளேன். FSI 1.40 பயன்படுத்தியுள்ளேன்.

ஆகவே, என் கட்டிட பிளான் வாங்கி வங்கி கடன் பெற்றுக் கட்டப்பட்டுள்ள, இதில் எந்தவித மீறலும் இல்லை. ஆகவே திரு முகம்மது யூசுப் என் கட்டிடத்தின் மீதுகொடுத்த புகாரை தள்ளுபடி செய்யும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்களுக்கு 19.10.2024ல் எழுதிய கடித்தில் முதல் பக்கத்தில் கடைசி பாராவில் முதல் வரியில் கீழ்பாக்கம் தியாகப்பா முதலி தெருவில் கதவிலக்கம் 65இல் உள்ள வீட்டில் அவரது நண்பரை (நண்பர் பெயரை குறிப்பிடவில்லை இது கவனிக்கதக்கது) அடிக்கடி சந்திக்க வந்ததாகவும் அந்த சந்திப்பில் கடைசியில் உள்ள வீட்டுக்காரர்கள் சந்தில் மோட்டார் பைக்கை நிறுத்தும்போது தகராறு செய்ததாக கூறியுள்ளார். இந்த மாதிரி ஒரு நிகழ்ச்சி நடைபெறவே இல்லை. இது ஜோடிக்கப்பட்ட கதை.

இரண்டாவது பக்கத்தில் முதல் பாராவில் இரண்டு மூன்றாவது வரியில் நண்பர் மூலம் என் வீட்டு கட்டிட அனுமதி வரைபடத்தை த.அ..உ. சட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி 8–மண்டலத்தில் பெற்று பார்த்தேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளார்.

திரு முகமது யூசுப் அவர்கள் சென்னை, கீழ்பாக்கம், தியாகப்பா தெரு கதவு எண் 44/65ல் குடியிருக்கும் திரு A பாலகிருஷ்ணன் , த/பெ ஆறுமுகநயினார், அவர்களை அடிக்கடி சந்திக்க சென்று வந்தார். திரு A பாலகிருஷ்ணன் என் வீட்டு அருகே பொது சந்தின் நடுவில் குடியிருக்கிறார். நான் பொது சந்தின் கடைசியில் உள்ளேன். 1987 முதல் 2024 வரை பிளான் அனுமதி பெறாமல், சட்ட விதிகளை மீறி பொதுபாதையை ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளார். அவர் வீட்டிலிருந்து 20 குழாய் வழியாக கழிவு நீரை பொது பாதையில் உள்ள ஐந்து மேன்வல் மூலம் கழிவு நீரை அகற்றி வந்தார். ஒரு வீட்டில் இருந்து ஒரு குழாய் வழியாகத்தான் கழிவு நீரை அகற்ற வேண்டும் என்பது சென்னை மெட்ரோ வாட்டர் துறை சட்டம்ஆகும்.

இதனால் போக்குவரத்து பிரச்சனை, சுகாதார பிரச்சனை எற்பட்டது. நேரடியாக பலமுறை கூறியும் எதுவும் செய்யவில்லை. அதனால் என் குடும்பத்தாரும் அங்கு வசிக்கும் மற்ற குடும்பத்தாரும் பாதிக்கப்பட்டோம்.

அதனால் தங்கள் அலுவலகத்தில் A பாலகிருஷ்ணன் வீட்டின் மீது மனு அனுப்பப்பட்டது. அதனை விசாரித்த தங்கள் அலுவலகத்தில் தங்களுக்கு முன்னால் இருந்த நடுவர் அவர்கள், கடித எண் 305/மா/2023 நாள் 31.10.2023 உத்தரவில் சென்னை மாநகராட்சி 8 மண்டல அலுவலர்கள் உள்நோக்கத்துடன் செயல்பட்டதாகவும், இச்செயல் கண்டிக்கதக்கது. ஆகவே, சென்னை மாநகராட்சி 8 மண்டல அதிகாரிகள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க தமிழக முதலமைச்சர் அலுவலத்திற்கு பரிந்துரைத்தார்கள்.

1. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அலுவலக உத்தரவு எண் 305/மா/2023 நாள் 31.10.2023 (இந்த தகவல் உத்தரவை படித்து பார்க்க வேண்டும் என்றும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்,)

2. திரு C.S. முருகன் B.E. MTP அடிசனல் செயலாளர் (டெக்னிக்கல்) வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை தலைமை செயலகம், சென்னை 9 கடித எண் 6486831/UDV1(2) 2024- நாள் 25.03.2024.

3. திரு. A. பாலகிருஷ்ணன் தொடர்ந்த சென்னை உயர்நீதி மன்றம் வழக்கு WP No.1028/2024ல் 12.8.2024ல் உத்தரவில் சென்னை மாநகராட்சி A. பாலகிருஷ்ணன் வீடு மீது நடவடிக்கை எடுக்கலாம் என்று கூறியுள்ளது. ஆனால் இதுவரை சென்னை பெருநகர மாநகராட்சி அதிகாரிகள் தொடர் நடவடிக்கை எடுக்கவில்லை. இன்றைய தேதி வரை திரு A பாலகிருஷ்ணன் தொடர்ந்து அந்த வீட்டில் இருந்து வருகின்றார்.

எந்த விதத்திலும் பாதிக்கப்படாத, சம்பந்தமில்லாத திரு. முகமது யூசுப் என் வீட்டுக்கும் அவர் வீட்டுக்கும் 40 கி.மீ. தொலைவில் உள்ளது. என் வீடு தியாகப்பா தெருவில் உள்ளது. 148 அடி சந்தின் கடைசியில் உள்ள வீடு பற்றி 10.07.2024 முதல் 07.11.2024 வரை சுமார் 5 மாதகாலமாக என் வீடு பற்றி சென்னை மாநகராட்சி மற்றும் உங்களுக்கும் தொடர்ந்து கடித எழுத காரணம் மேற்கண்ட அரசு உத்தரவால் பாதிக்கப்பட்ட திரு. A பாலகிருஷ்ணன் சென்னை பெருநகர மாநகராட்சி 8வது மண்டல அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதியின் தூண்டுதல் பேரில் இந்த தவறை செய்துள்ளார். எதற்காக இந்த தவறை செய்தார் என்ற காரணத்தை தாங்களே முடிவு செய்யும்படி தங்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

என் வீடு மீது புகார் தந்துள்ள திரு முகமது யூசுப் அவர்களின் மனுவை தள்ளுபடி செய்யும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே, திரு. முகமது யூசுப், A. திரு. பாலகிருஷ்ணன் மற்றும் சம்பந்தப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், திரு முகமது யூசுப்பின் மேற்கண்ட நடவடிக்கையால் எனக்கு மிகுந்த மன உளைச்சல் ஏற்பட்டது. 15 நாட்களாக வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. ஆகவே, சென்னை மாநகர காவல் ஆணையருக்கு பரிந்துரை செய்ய வேண்டுகிறேன்.

தாங்கள் தக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், தொடர்ந்து இந்த மாதிரி வேலைகளை அவர் செய்து, உங்கள் அலுவலகத்திற்கு தேவையற்ற கால விரயத்தையும், வேலை பளுவையும், ஏற்படுத்துவார். இதனால் பொதுமக்களுக்கும் மன உளைச்சல், கால விரையம் ஏற்படுகிறது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

11. மனுதாரர் 09.04.2025 நாளிட்ட மின்னஞ்சலில் கோரியவாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 28.04.2025அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8ன் மண்டல அலுவலர் ஆகியோருக்கு 15.04.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

12. மனுதாரர் 28.04.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"சென்னை 10 கீழ்ப்பாக்கம், தியாகப்பா முதலி தெருவில் கதவு இலக்க 65ல் வசிக்கும் எனது நண்பரை பார்க்க சென்றபோது அந்த வீடு 6 அடி அகல சந்தில் 3 வீடுகள் கட்டப்பட்டுள்ளது. என்னுடைய வாகனத்தை நிறுத்தும் போது அங்கு வாடகைக்கு இருப்பவர்கள் தகராறு செய்கிறார்கள். கதவு இலக்க 66ல் உள்ள இக்கட்டிடம் அம்மாபொண்ணு என்பவருக்கு கடந்த 01.03.2012ல் சென்னை மாநகராட்சி திட்ட அனுமதி வழங்கியுள்ளது. ஆனால் அனுமதியின்படி நான்கு பக்கமும் 5 அடி அகல set back விடவேண்டும். அதாவது 1.5 மீட்டர் அகலம். ஆனால் அவர் கிழக்கு பக்கம் 5 அடி அகலம் விடாமல் 1அடி அகலம் விட்டு

pillar போட்டு வீடு கட்டியுள்ளார். இக்கட்டிடத்திற்கு வந்து செல்வோர் தங்களுடைய வாகனத்தை நிறுத்த போதுமான இடவசதி அளிக்கவில்லை.

மேற்படி அம்மா பொண்ணு அவர்கள் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்ட பிரிவு 49ன்படி திட்ட அனுமதி பெற்று அதன்படி கட்டாமல் கட்டிட அனுமதிக்கு புறம்பாகவும் சட்ட விரோதமாகவும் வீட்டை கட்டியுள்ளார்.

மேற்படி விதி மீறி கட்டப்பட்டுள்ள கட்டிடம் குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் மண்டலம் 8ன் அலுவலகத்திற்கு புகார் மனு அளித்தும் அவர்கள் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஏனவே, மேற்கண்ட விதி மீறி கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் மீது உரிய சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்குமாறும், என் புகாருக்கு உரிய நடவடிக்கை எடுக்க தவறி காலம் தாழ்த்திய அலுவலர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

**13.** பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல 8ன் செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் 28.04.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

“ஏற்கனவே சென்னை கீழ்ப்பாக்கம் தியாகப்பா தெரு, கதவு எண்.66ல் வசிக்கும் திருமதி.அம்மாபொண்ணு என்பவர், திரு.பாலகிருஷ்ணன் என்பவர் மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் மனு சமர்ப்பித்தன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இது தொடர்பாக திரு.பாலகிருஷ்ணன் என்பவர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.W.P.No.1028 of 2024 தொடரப்பட்டு இவ்வழக்கில் 12.08.2024 நாளிட்ட தீர்ப்பில், இம்முறைமன்ற ஆணையினை தள்ளுபடி செய்தும், பெருநகர சென்னை மாநகராட்சி தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு திட்டம் சட்டம் 1971ன் பிரிவு 80–ன்படியின் கீழ் தமிழ்நாடு அரசு ஆணையிட்டவாறு உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஆணையிட்டது.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டிடம் 30–35 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டதாகும். இருப்பினும் Tamil Nadu Town and Country Planning Act, 1971 பிரிவு 56 (மற்றும்) 57ன் கீழ் மனுதாரர் தெரிவித்துள்ள திருமதி.அம்மாபொண்ணு அவர்களுக்கு Notice for production of documents கோரி தாக்கீது வழங்கப்பட்டுள்ளது. மற்றும் அமலாக்க நடவடிக்கைக்காக 14.02.2025 நாளிட்ட தாக்கீது வழங்கப்பட்டுள்ளது.

மேலும் எதிர் மனுதாரரான திருமதி.அம்மாபொண்ணு அவர்கள் தாக்கீது தமிழ் மொழியில் கோரியதற்கு இணங்க சென்னை தலைமையிடத்து Town Planning Sectionக்கு 06.03.2025 நாளிட்ட கடிதத்தில் உரிய ஆணை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. ஆணை பெறப்பட்ட பின்பு தமிழில் தாக்கீது அளிக்கப்பட்டு திருமதி.அம்மாபொண்ணு அவர்களால் அளிக்கப்படும் வரைப்படத்தின்படி உரிய சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்று இம்முறைமன்றம் முன் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.”.

**14.** மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 8, மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் செயற் பொறியாளர், உதவிப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான திருமதி அம்மா பொண்ணு அவர்களின் வாக்குமூலம் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர், சென்னை 10, கீழ்ப்பாக்கம், தியாகப்பா முதலி தெருவில் கதவு இலக்கம் 65ல் வசிக்கும் தனது நண்பரை பார்க்க சென்றபோது அந்த வீடு 6 அடி அகல சந்தில் 3 வீடுகள் கட்டப்பட்டுள்ளது எனவும், தன்னுடைய வாகனத்தை நிறுத்தும்போது அங்கு வாடகைக்கு இருப்பவர்கள் தகராறு செய்ததாகவும், கதவு இலக்கம் 66 கொண்ட அக்கட்டிடம் திருமதி அம்மாபொண்ணு என்பவருக்கு சொந்தமானதும், அவர் பெற்ற திட்ட அனுமதியின்படி நான்கு பக்கமும் 5 அடி அகல Set back விடவேண்டும் ஆனால் கிழக்கு பக்கம் 5 அடி அகலம் விடாமல் 1 அடி அகலம் விட்டு Pillar போட்டு வீடு கட்டியுள்ளார் எனவும், இக்கட்டிடத்திற்கு வந்து செல்வோர் தங்களுடைய வாகனத்தை நிறுத்த போதுமான இடவசதி அளிக்கவில்லை எனவும், மேற்படி அம்மாபொண்ணு என்பவர் திட்ட அனுமதி பெற்று அதன்படி கட்டாமல் கட்டிட அனுமதிக்கு மாறாகவும் சட்ட விரோதமாக வீட்டை கட்டியுள்ளார் எனவும், மேற்படி விதி மீறி கட்டப்பட்டுள்ள கட்டிடம் குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் மண்டலம் 8ன் அலுவலகத்திற்கு புகார் மனு அளித்தும் அவர்கள் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், எனவே மேற்கண்ட விதி மீறி கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் மீது உரிய சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்குமாறும், தன் புகாருக்கு உரிய நடவடிக்கை எடுக்க தவறி காலம் தாழ்த்திய அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

இரண்டாவது எதிர்மனுதாரர் திருமதி அம்மாபொண்ணு என்பவர் தன்னுடைய வாக்குமூலம் மற்றும் பதில் மனுவில் தங்களுடைய வீடு Continous Planning Area என்ற வகைப்பாட்டை சேர்ந்தது எனவும், இவ்வகையான வகைப்பாட்டை சேர்ந்த கட்டிடங்களுக்கு மூன்று பக்க இடைவெளி விடவேண்டிய அவசியம் இல்லை எனவும், கட்டிடத்தின் முன்பகுதியில் மட்டும் இடைவெளிவிட்டால் போதுமானது எனவும், ,அதற்கு ஆதாரமாக பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8 ன் செயற்பொறியாளர்/பொது தகவல் அலுவலர் அளித்துள்ள தகவலை ஆதாரமாக அளித்துள்ளதாகவும், இருப்பினும் தாங்கள் மூன்று பக்கமும் போதுமான இடைவெளி விட்டு கட்டி உள்ளோம் எனவும், வீட்டிற்கான வரைப்பட அனுமதியின்படி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது எனவும், எந்தவித விதி மீறலும் இல்லை எனவும், மொத்தம் 2500 சதுர அடியில் 1500 சதுர அடி மட்டுமே கட்டப்பட்டுள்ளது எனவும், தங்கள் மீது புகார் அளித்திருக்கும் திரு முகமதுயூசுப் என்பவர் தங்கள் பகுதியில் இருந்து 40 கிலோமீட்டர் தொலைவில் உள்ளதாகவும், அவருக்கும் தங்களுடைய வீட்டிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை எனவும், மனுதாரர் என் வீடு பற்றி சென்னை மாநகராட்சி மற்றும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு கடிதம் எழுத காரணம் என் பக்கத்து வீட்டின் உரிமையாளர் திரு A பாலகிருஷ்ணன் அவர்கள் மீது தான் புகார் அளித்து அதனால் பாதிக்கப்பட்ட அவரின் தூண்டுதலே காரணம் என்று தெரிவித்திருப்பது அறிய முடிகிறது.

சென்னை கீழ்ப்பாக்கம் தியாகப்பா தெரு கதவு எண் 66ல் வசிக்கும் திருமதி அம்மா பொண்ணு என்பவர் திரு A பாலகிருஷ்ணன் என்பவர் மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் மனு சமர்ப்பித்தன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும், இது தொடர்பாக திரு A. பாலகிருஷ்ணன் என்பவர் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண் W.P.No.1028 of 2024, 12.08.2024 நாளிட்ட தீர்ப்பில், இம்முறைமன்ற ஆணையினை தள்ளுபடி செய்தும், பெருநகர சென்னை மாநகராட்சி தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு திட்டம் சட்டம் 1971ன் பிரிவு 80ன் கீழ் தமிழ்நாடு அரசு ஆணையிட்டவாறு உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது எனவும், மேலும் திருமதி அம்மாபொண்ணு மீது புகார் அளித்திருக்கும் மனுதாரர் அவ்விடத்தில் வசிப்பவர் இல்லையென்றும், திருமதி அம்மா பொண்ணு அவர்களின் வீட்டினால் பாதிக்கப்பட்டவரும் இல்லையெனவும், இருப்பினும் மனுதாரர் புகார் தெரிவித்துள்ள திருமதி அம்மா பொண்ணு என்பவருக்கு Notice for production of documents கோரி தாக்கீது வழங்கப்பட்டுள்ளது எனவும், அமலாக்க நடவடிக்கைக்காக 14.02.2025 நாளிட்ட தாக்கீது வழங்கப்பட்டுள்ளது

எனவும், திருமதி அம்மா பொண்ணு அவர்கள் தாக்கீது தமிழ் மொழியில் கோரியதற்கு இணங்க சென்னை தலைமையிடத்து Town Planning Section க்கு 06.03.2025 நாளிட்ட கடிதத்தில் உரிய ஆணை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது எனவும், ஆணை பெறப்பட்ட பின்பு திருமதி அம்மா பொண்ணு என்பவரால் அளிக்கப்படும் வரைப்படத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் மாவட்ட வருவாய் அலுவலர்/ மண்டல அலுவலர் தன்னுடைய அறிக்கையிலும், செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் தங்களது வாக்குமூலத்திலும் தெரிவித்தவாறு, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் மாவட்ட வருவாய் அலுவலர்/மண்டல அலுவலருக்கு உத்தரவிடுமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 14–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. முகம்மது யூசுப்,
எண் 5/53E, வினோபாநகர்,
சித்தாலப்பாக்கம், சென்னை–600 131.
2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.
3) மண்டல அலுவலர், மண்டலம் 8,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 36B, புல்லா அவின்யூ,
செனாய் நகர், சென்னை–600 030.
4) திருமதி அம்மாபொண்ணு,
42/66, தியாகப்பா முதலி தெரு,
கீழ்ப்பாக்கம், சென்னை–600 010.
5) கண்காணிப்பாளர், மழைநீர் வடிகால் துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

16/7/25
செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
16/7/25 10/17